# ஜோதி வழிபாடு

புதுச்சேரி ஞானாசிரியர் திரு. பா. கமலக்கண்ணன்





# ஜோதி வழிபாடு

**பா. கமலக்கண்ணன்**


அருட்பெருஞ்ஜோதி தியான கூடம்
முதியோர் சரணாலயம்
மொரட்டாண்டி, ஆரோவில் அஞ்சல்,
பாண்டிச்சேரி - 605 101.

# முன்னுரை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

இராமலிங்கப் பெருமானார் மேட்டுக்குப்பம் சித்தி வளாகத் திருமாளிகையில் 30-01-1874 அன்று திருக்காப்பிட்டுக் கொள்வதற்கு சுமார் ஒரு மாதம் முன்பு, உள்ளேயிருந்த விளக்கை எடுத்து வந்து தமது அணுக்கத் தொண்டர்களின் முன்னால் வைத்துவிட்டு இவ்வாறு கூறினார் :-

"ஆண்டவர் இப்போது தீப முன்னிலையில் இருப்பதால்
.................... தெய்வபாவனையை இந்த தீபத்தில் செய்யுங்கள்"

பெருமானாரின் வாக்கு மனித இனம் முழுமைக்கும் உரிய வாக்காகும். ஆகவே, உலகில் வாழ்வாங்கு வாழ விரும்புவோர், தீபத்தின் முன்னிலையில் தெய்வ பாவனை செய்ய வேண்டுவது அவசியமாகும். அதற்குரிய வழிமுறைகளை திருஅருட்பாவிலிருந்து தேர்ந்தெடுத்து குறு நூலாக உருவாக்கி பெருமானாரின் திருவடிகளில் சமர்ப்பித்துள்ளேன்.

இராமலிங்கப்பெருமானார் திருவடிகள் வாழ்க ! வாழ்க !

பாத சேவகன்
**பா. கமலக்கண்ணன்.**

16, கிழக்குத்தெரு
பழைய சாரம், புதுச்சேரி - 605 013
தொலைபேசி : 91 - 413 - 2248046
e-mail : kamalakkannan1932@gmail.com
www.ramalingaperumanar.com

# ஆசிரியரின் ஆன்மிக நூல்கள்

1. ஞானக்கனல்
2. குணங்குடியாரின் ஞானவழி
3. சித்தர் நூல்களில் அகத்தியர் திருவள்ளுவர் வரலாறு
4. சித்தர் தத்துவம் (தமிழ்நாடு அரசின் பரிசு பெற்றது)
5. இந்து, கிறிஸ்துவம், இஸ்லாம் ஒருமைப்பாடு
6. திருப்புகழ் காட்டும் முத்தி நெறி
7. வேதம் விளக்கும் தேவ இரகசியம்
8. சதுரகிரியில் கோரக்க சித்தர்
9. சித்தர் உருவில் சிவபெருமான்
10. சைவ சித்தாந்த உண்மை விளக்கம்
11. அருட்பெருஞ்சோதி ஞானச் சித்தர்
12. அருட்பெருஞ்சோதி அகவல் ஞான விளக்கம்
13. வானிலிருந்து வந்தவர் வாழ்வும் ஜோதி வழிபாடும்
14. திருஅருட்பா ஞானவிளக்கம் (முதல் திருமுறை)
15. திருஅருட்பா ஞானவிளக்கம் (இரண்டாம் திருமுறை)
16. திருஅருட்பா ஞானவிளக்கம் (3,4,5 ஆம் திருமுறை)
17. திருஅருட்பா ஞானவிளக்கம் (ஆறாம் திருமுறை)
18. ஜோதி வழிபாடு

**அருட்பெருஞ்சோதி தியான கூடம்**
முதியோர் சரணாலயம்
மொரட்டாண்டி, ஆரோவில் அஞ்சல்
பாண்டிச்சேரி - 605 101

# ஜோதி வழிபாடு

இராமலிங்கப் பெருமானார் சித்தி வளாகத் திருமாளிகையில் திருக்காப்பிட்டுக் கொள்வதற்கு ஒரு மாதம் முன்னால் (1873 டிசம்பர் மாதத்தில் ஒரு நாள்) உள்ளேயிருந்த தகரக்கண்ணாடி விளக்கை எடுத்து வந்து வெளியே வைத்து இவ்வாறு கூறினார் :-

"**இதைத் தடைபடாது ஆராதியுங்கள்............ ஆண்டவர் இப்போது தீப முன்னிலையில் விளங்குகிற படியால், உங்களுடைய காலத்தை வீணிற் கழிக்காமல், நினைந்து நினைந்து என்னும் தொடக்கமுடைய 28 பாசுரமடங்கிய பதிகத்தில் கண்டபடி தெய்வபாவனையை இந்த தீபத்தில் செய்யுங்கள்**".

பெருமானாருடைய வாக்கின்படி, அருட்பெருஞ்சோதி ஆண்டவர், தீபத்தின் முன்னிலையில் விளங்குவதால், சன்மார்க்கத்தை நாடுவோர் அனைவரும் ஜோதி வழிபாடு செய்வது கடமையாகும்.

மேலும் பெருமானார் குறிப்பிட்ட 28 பாடல்களில் அடங்கிய அறிவுரைகளைக் கேட்போம் :-.

1) ஜோதி சொரூபத்தில் அருட்பெருஞ்சோதி ஆண்டவரை நினைந்து நினைந்து, உணர்ந்து உணர்ந்து, நெகிழ்ந்து நெகிழ்ந்து, ஊற்றெழும் கண்ணீரால் உடம்பு நனைந்து நனைந்து, வழிபட வேண்டும்.

2) அருட்பெருஞ்சோதி ஆண்டவரை பக்தியோடு பணிய வேண்டும்.

3) பணிந்தும் தணிந்தும் அருட்பாடல்களைப் பாடியும் போற்ற வேண்டும்.

4) மெய்யான பொருளை நன்குணர்ந்து நெற்றி நடுநிலையிலுள்ள இறைவனை அடைவீர்.

5) பஞ்சமா பாதகங்களாகிய கொலை, களவு, போதைப்பொருள் உண்ணல், மாற்றான் மனைவியை இச்சித்தல், பொய் சாட்சியம்

கூறல் ஆகியவற்றை விலக்கி சத்திய ஞான சபைக்கு வந்து சமரச சன்மார்க்கம் அடைந்திடுவீர்.

6) நெற்றி நடுநிலையில் விளங்கும் இறைவனைச் சிந்தித்தால் உடல் அழியாத நிலையை அடையலாம்.

7) வடலூர் சத்தியஞானசபையில் ஆண்டவர் விரைவில் தோன்றி சித்துகள் புரிவார்.

8) உள்ளம் உருகிக்கரைந்து கண்களில் நீர்பெருகிட தியானம் செய்தால் நல்ல வரம் பெறலாம்.

9) இறந்தவர்களை ஆண்டவர் எழுப்புவார்.

10) ஐந்தொழிலும் செய்யவல்ல ஆண்டவர் என்னுயிரில் கலந்துள்ளார்.

11) உடைந்த சமயக் குழியிலிருந்து விடுபட்டு சன்மார்க்கத்தை உணருங்கள்.

12) தீய நெறியில் வீழ்ந்து உழலாதீர்.

13) ஆண்டவர் என்னுள்ளிருந்து உணர்த்துவதை நான் பேசுகிறேன்.

14) தானே அனைத்துமாய் விளங்கும் இறைவனை சிந்தை செய்தால், உத்தமமான சித்திகளைப் பெறலாம்.

15) **ஆண்டவர் ஐந்தொழிலும் செய்கின்ற ஆற்றலை எனக்கு அருளியுள்ளார். நீங்களும் அவரையே சிந்தியுங்கள்.**

16) **ஐந்தொழிலும் செய்யவல்ல சிவபதியை நினைந்திருப்பீர்.**

17) **ஞானத்தவம் பயின்றறிவதற்கு என்னிடம் விரைந்து வாரீர்.**

18) சூதும் வாதும் அறிந்து, தூய ஞானத்தை அறிந்திலீரே !

19) நானுரைக்கும் வார்த்தை எல்லாம் ஆண்டவர் கூறியவை. நான் உங்களுக்கு இரக்கத்தால் கூறுகின்றேன்.

20) நெற்றி நடுநிலையிலுள்ள ஜீவனை இயக்கும் இறைவனைத் தெரிந்து போற்றுவீர்.

21) சமரச சன்மார்க்கப் பெரு நெறியில் நின்றால் மரணத்தை வெல்லலாம்.

22) நீங்கள் புனிதமடையும் பொருட்டு, நான் சத்தியமான வார்த்தைகளைக் கூறுகிறேன்.

23) **மரணமிலாப் பெருவாழ்வு பெறுவதற்கு சத்தியஞான சபைக்கு வாரீர்.**

24) **சமரச சுத்த சன்மார்க்கத்தைச் சேராத மற்றவர்களால் மரணத்தை வெல்ல இயலாது.**

25) **என்னிடம் வந்தால் இப்பிறவிலேயே நித்தியமான வாழ்வைப் பெற்றுப் பேரின்பம் அடைந்திடலாம்.**

26) நீங்கள் மரணத்தைத் தவிர்ப்பதற்கு என்னோடு சேர்ந்திருப்பீர்.

27) சன்மார்க்க சங்கத்தாரைத் தவிர மற்றவர்களால் அறிவதற்கரிய அருட்பெருஞ்சோதி ஆண்டவரை அடைந்திட சத்திய ஞான சபைக்கு வாரீர்.

28) அருட்பெருஞ்சோதி ஆண்டவரை உள்ளம் கனிந்துருகிப் போற்றி மகிழ்ந்திடுவீர்.

இராமலிங்கப் பெருமானார் கூறிய சொற்களைப் பலமுறை ஆழ்ந்து சிந்திக்கின்றோம். விளக்குக்கும் மரணமிலாப் பெருவாழ்விற்கும் என்ன தொடர்பு உள்ளது? வேறு எவராவது இப்பொருள் பற்றி கூறியுள்ளனரா என்று ஆராய்கிறோம்.

**முதலில் திருமூலர் கூறுவதைக் கேட்போம் :-**

1. அடியார் பரவும் அமரர் பிரானை
   முடியால் வணங்கி முதல்வனை முன்னிப்
   படியார் அருளும் பரம்பரன் எந்தை
   விடியா விளக்கென்று மேவி நின்றானே - திருமந்திரம் 48

"ஞானிகள் போற்றும் அமரர் தலைவனாகிய சிவபெருமானை சிரந்தாழ்த்தி வணங்கி, பரப்பிரம்மத்தை நினைந்திட, படிபோன்ற நெற்றி நடுநிலையில் அணையாத விளக்கு போன்ற சிவலிங்க வடிவ ஜீவஜோதியாகப் பொருந்தி நிற்கும் பரப்பிரம சொரூபம் அருள்புரியும்".

2. நிற்கின்ற போதே நிலையுடையான் கழல்
   கற்கின்ற செய்மின் கழிந்துறும் பாவங்கள்
   சொற்குன்ற லின்றித் தொழுமின் தொழுதபின்
   மற்றொன்றிலாத மணி விளக்காமே - திருமந்திரம் 292

"உடலில் உயிர் இருக்கும்போதே பரப்பிரம்மத்தின் திருவடிகளை அடைதற்குரிய ஞானத்தவம் செய்வதைக் கற்பீர். குருவின் உபதேசத்திற்கு மாறுபடாமல் தவம் செய்வீர். தவம் செய்தால் ஈடு இணையற்ற மணி விளக்காகிய சிவலிங்க வடிவின் தரிசனம் கிட்டும்; உடனே பாவங்கள் எல்லாம் எரிந்து போகும்".

திருமூலர் தொடர்ந்து பாடுகின்றார் :-

3. **விளக்கினை ஏற்றி வெளியை அறிமின்**
   **விளக்கினின் முன்னே வேதனை மாறும்**
   **விளக்கை விளக்கும் விளக் குடையார்கள்**
   **விளக்கில் விளங்கும் விளக்கவர் தாமே** - திருமந்திரம் 1818

"நெற்றி நடுநிலையில் விளங்கும் விளக்காகிய சிவலிங்க வடிவ ஜீவ சொரூபத்தை, சுழுமுனை சுவாசத்தில் சுடர்விடச் செய்தால், பரப்பிரம ஒளி தோன்றும், ஞானத்தவத்தால் அந்த ஜீவ சொரூபத்தைக் கண்டிட, பாவங்கள் எல்லாம் பறந்து போகும். விளக்காகிய ஜீவனை விளக்கும் ஞானிகள், தமது சூக்கும

சரீரத்தை ஜீவனோடு இணைத்து முத்தி நிலை அடைந்தவர்களாவர்."

4. **விளக்கைப் பிளந்து விளக்கினை ஏற்றி**
   **விளக்கினுக் குள்ளே விளக்கினைத் தூண்டி**
   **விளக்கில் விளக்கை விளக்க வல்லார்க்கு**
   **விளக்குடையான் கழல் மேவலு மாமே** - திருமந்திரம் 2816

"விளக்காகிய சிவலிங்க வடிவ ஜீவஜோதியை, இரு கூறாக - அதாவது, அடியிலுள்ள ஆவுடை என்னும் அற ஆழியை "சிவம்" என்றும், நடுவிலுள்ள சுடர்ச் சோதியை "சக்தி" என்றும் பிரித்து உணர்ந்து, ஞானத் தவத்தால் அதைப் பிரகாசிக்கச் செய்து, சுழுமுனை சுவாசத்தைப் பிரமரந்திரத்தினுள்ளே நுழைத்து, சூக்கும சரீரத்தை உயர்த்தி, ஜீவனோடு இணைத்து, உச்சிக்குழியைத் திறக்கச் செய்த ஞானிகளுக்கு ஜீவசொரூபம் என்றென்றும் பொருந்தி நிற்பதால் மரணமிலாப் பெருவாழ்வு உண்டாகும்".

5. ஆதியுமாய் அரனாய் உடலுள் நின்ற
   வேதியுமாய் விரிந்து ஆர்ந்திருந்தான் அருட்
   சோதியுமாய்ச் சுருங்காததோர் தன்மையுள்
   நீதியுமாய் நித்தமாகி நின்றானே - திருமந்திரம் 15

"பரப்பிரமமாய், சிவபெருமானாய், அருட்சோதியாய், நுழைவாயில் இல்லாத தன்மையுள்ள சத்தியப் பொருளாய், அழிவற்றதாய், உடலுள் நிற்கும் உயிர், விளங்குகின்றது".

திருமூலர் அருளிய விளக்கம் நம் அறிவைத் தெளிவிப்பதாக இருக்கக் காண்கிறோம். ஆயினும் அவர் சித்தர்களுள் ஒருவராக இருப்பதால், தேவாரம், திருவாசகத்தில் ஏதாவது ஆதாரம் உள்ளதா என்று ஆய்வு செய்கிறோம்.

**முதலில் திருஞானசம்பந்தர் கூறும் சாட்சியத்தைக் கேட்போம் :-**

1. ஊனில் உயிர்ப்பை ஒடுக்கி ஒண்சுடர்
   ஞான விளக்கினை ஏற்றி நன்புலத்
   தேனை வழிதிறந்து ஏத்துவார்க்கு இடர்
   ஆன கெடுப்பன அஞ்செ ழுத்துமே
   - சம்பந்தர் தேவாரம், பஞ்சாட்சரத் திருப்பதிகம்.

உடலுக்குள்ளே சுவாசத்தை ஒடுக்கி, ஒளி பொருந்திய சுடர் உடைய ஞான விளக்கினை ஏற்றி, நல்லறிவு சொரூபமாகிய சூக்குமசரீரத்தை, சுழுமுனை வாசல் திறந்து மேலே உயர்த்தி ஜீவனோடு சேர்ப்பவர்களுக்கு, பாவங்களை எல்லாம் சிவபெருமான் போக்கி விடுவான்.

2. ஓதி யாரும் அறிவாரில்லை ஓதி உலகெலாம்
   சோதியாய் நிறைந்தான் சுடர் சோதியுட் சோதியான்
   வேதியாகி விண்ணாகி மண்ணோடு எரி காற்றுமாய்
   ஆதியாகி நின்றானும் ஐயாறுடை ஐயனே!
   - சம்பந்தர் தேவாரம், திருவையாறு.

அறிவுப் பொருளாய், உலகெலாம் சோதியாய், சிவலிங்க வடிவ ஜீவ ஜோதியின் நடுவிலுள்ள சோதிச் சுடராய், ஜீவ சொரூபமாகி, ஐம்புலன்களாகி நிற்பவன் சிவபெருமானே என்று நூல்களை கற்று அறிந்தவர் எவருமிலர். (அநுபவத்தால் மட்டுமே அறிய இயலும்).

ஜீவனே ஞானவிளக்கு! ஜீவனே சிவலிங்க வடிவம்! சோதியுட் சோதியே ஜீவசொரூபம்! ஜீவனை இயக்குபவன் சிவபெருமான் என்ற உண்மையைக் கற்று அறிவாரில்லையே என்று ஞானசம்பந்தர் கூறக் கேட்டோம்.

அடுத்து சிவப்பழமாய் உழவாரப்படையுடன் அப்பரடிகள் வருகின்றார். அவர் திருவடிதொழுது நிற்கின்றோம்.

**அப்பர் பாடுவதைக் கேளுங்கள் :-**

1. மெய் கிளரும் **ஞானவிளக்கு** கண்டாய்
   மெய்யடியார் உள்ளத்து வித்துகண்டாய்
   - அப்பர் தேவாரம், திருமறைக்காடு 2

- உடலை இயக்கும் ஞானவிளக்கான ஜீவசொரூபம், ஞானிகளின் உள்ளத்தில் உயர்ந்து நிற்கின்றது.

2. **இல்லக விளக்கது இருள் கெடுப்பது**
   **சொல்லக விளக்கது சோதி உள்ளது**
   **பல்லக விளக்கது பலரும் காண்பது**
   **நல்லக விளக்கது நமச்சிவாயவே**
   - அப்பர் தேவாரம், பொது 8

- இல்லத்தில் ஏற்றப்படும் விளக்கு புற இருளைப் போக்குவது; உடலுக்குள்ளேயுள்ள விளக்கு சுயஞ்சோதி உள்ளது. மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐந்தறிவாகிய விளக்குகள் பலரும் காண்பது; ஆனால் நல்ல அக விளக்காகிய ஜீவ சொரூபம் சிவலிங்க வடிவானது.

3. நீதியை நிறைவை மறை நான்குடன்
   ஓதியை ஒருவர்க்கும் அறிவொணாச்
   சோதியைச் சுடர் செம்பொன்னை அம்பலத்து
   ஆதியை அடியேன் மறந்து உய்வனோ?
   - அப்பர் தேவாரம், கோயில்

- சத்தியப் பொருளை, முழுமைப் பொருளை நான்கு வேதங்களை ஓதியும் ஒருவர்க்கும் அறியவொண்ணாச் சோதியை, செம்பொன் போல் சுடர் விட்டு நெற்றி நடு நிலையில் நிற்கும் பரப்பிரம சொரூபமான ஜீவனை, அடியேன் மறந்து வாழ்வேனோ?

உடலை இயக்கும் ஜீவனே ஞானவிளக்கு! ஜீவன் சிவலிங்க வடிவ ஜோதி சொரூபமானது! ஜீவனே சத்தியப் பொருள்! ஜீவனே முழுமைப் பொருள்! நான்கு வேதங்களை ஓதியும் அறியப்படாதது

ஜீவனே! நெற்றி நடுநிலையில் ஒளிரும் பரப்பிரம சொரூபமே ஜீவன்.

- இவ்வாறு அப்பரடிகள் கூறிய விளக்கத்தைக் கேட்டோம்.

இறுதியாக வருபவர் வாதவூரடிகள் என்னும் மாணிக்க வாசகப்பெருமான், அவர் இரத்தினச் சுருக்கமாகக் கூறுவதைக் கேளுங்கள் :-

**சோதியே சுடரே சூழொளி விளக்கே** !

- திருவாசகம், 29 அருட் பத்து 458

அறஆழியாய் (சிவலிங்க வடிவ) சோதியாய், நடுவில் சுடராய், ஒளி சூழ்விளக்காய் விளங்குவது ஜீவனே!

இவ்வாறு திருமூலர், சம்பந்தர், அப்பர், மாணிக்கவாசகர் ஆகியோர் கூறிய விளக்கங்களை சிந்தித்து தெளிவு பெறுவோம்.

அன்று, விளக்கை எடுத்து வெளியேவைத்து வழிபடுமாறு கூறிய இராமலிங்கப் பெருமானார், திருவருட்பா இரண்டாம் திருமுறையில், இப்பொருள் பற்றிக் கூறியுள்ள விளக்கங்களைத் தேடித் திரட்டித் தந்திருக்கிறேன்; பாருங்கள் :-

1) மாசில் **ஜோதி மணி விளக்கே** ! 14/8
2) மன்றிருந்தோங்கும் **மணிச்சுடர் ஒளியே** ! 42/1
3) தில்லை அம்பல திகழ் **ஒளிவிளக்கே** ! 48/1 முதல் 10 வரை
4) வேத உச்சியில் விளங்கொளி விளக்கே ! 53/8
5) மெய்யகத்தே நின்றொளிர்தரும் **ஞான விரிசுடரே** ! 73/7
6) **ஒளியின் ஒளியே** நாத வெளியின் வெளியே விடய
உருவின் உருவே! உருவினாம் உயிரினும் உயிரே 78/8
7) தோற்றரிய சுயஞ்சுடரே! ஆநந்தச் செழுந்தேனே !
**சோதியே** ! 94/14
8) மெய்யா **மெய்ஞ்ஞான விளக்கே** ! 94/33
9) **மெய்விளக்கே விளக்கல்லால் வேறு**
**விளக்கில்லை என்றார் மேலோர்** 96

10) கோடாத மணி விளக்கே ! 100/4

மேற்குறிப்பிட்ட ஆதாரங்களிலிருந்து உலகம் அறிய வேண்டிய உண்மைகளாவன:-

1) சித்தர், முத்தர், ஞானியர் ஆகியோர் ஜீவனைப் பரிபாஷையில் "விளக்கு" என்றும் "அருட்சோதி" என்றும் குறிப்பிடுவர்.

2) ஜீவன் சிவலிங்க அமைப்பிலான ஜோதி சொரூபம்

3) அடியிலுள்ள அறஆழி (ஆவுடை) சிவசொரூபம் என்றும், நடுவிலுள்ள ஜோதி சக்தி சொரூபம் என்றும் கூறப்படும்.

4) ஜீவன் பரப்பிரம சொரூபமாகும்.

5) ஜீவனை சிவசொரூபம் என்றும் கூறுவர்.

6) ஜீவன் நித்தியமானது.

**பரப்பிரம சொரூபமான அறஆழியான (சிவலிங்க வடிவ) சுயஞ்சோதியே நம்முடைய ஜீவனாக நெற்றி நடுநிலையில் பிரமரந்திரத்தினுள் விளங்குவதால், நாம் முதலில் புறத்தே விளக்கு வைத்து வழிபட வேண்டுமென்றும், பின்னர் உடலின் உள்ளேயுள்ள ஜீவனை நோக்கி தியானம் செய்ய வேண்டுமென்றும், ஆன்றோர் வகுத்துள்ளனர். ஆகவேதான் இராமலிங்கப் பெருமானார் புறத்தே ஜோதி வழிபாடு செய்யுமாறு கட்டளையிட்டார்.**

**ஜோதி வழிபாடு செய்யும் முறையாவது :-**

1. **நாள்** : எந்நாளிலும் அவரவர் வசதிக்கேற்ப தினமும் அல்லது வியாழன், ஞாயிறு அல்லது பூச நட்சத்திரத்தன்று ஜோதி வழிபாடு செய்யலாம்.

2. **நேரம்** : காலையிலும், மாலையிலும் 5.00 மணியிலிருந்து 9.00 மணிக்குள் வழிபாடு செய்ய வேண்டும்.

3. **தீபம் ஏற்றும்முறை** : ஒரு அகல் விளக்கில் எண்ணெய் ஊற்றி, நாம் தரையில் அமர்ந்தால் நெற்றிக்கு நேராக வரும் உயரத்தில் வடக்கு பக்க சுவர் ஓரத்தில் வைக்க வேண்டும். வயதில் முதியவர் மகா மந்திரம் கூறிக்கொண்டே விளக்கை ஏற்ற வேண்டும்.

4. **சங்கல்பம்**

கீழ்க்கண்ட சங்கல்பத்தை, ஒருவர் இடைவெளி விட்டு வாசிக்க அனைவரும் சேர்ந்து திரும்பக் கூற வேண்டும் :-

"எல்லாம் உடைய அருட்பெருஞ்சோதி அற்புதக் கடவுளே! இது தொடங்கி எக்காலத்தும், சுத்த சன்மார்க்கத்தின் முக்கிய தடையாகிய சமயங்கள், மதங்கள், மார்க்கங்கள் என்பனவற்றின் ஆசார, சங்கற்ப விகற்பங்களும், வருணம், ஆசிரமம் முதலிய உலகாசார சங்கற்ப விகற்பங்களும், எங்கள் மனத்தில் பற்றாத வண்ணம், அருள் செய்தல் வேண்டும். சுத்த சன்மார்க்கத்தின், முக்கிய லட்சியமாகிய, ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமை, எங்களுக்குள், எக்காலத்தும், எவ்விடத்தும், எவ்விதத்தும், எவ்வளவும் விலகாமல் விளங்கச் செய்வித்தருளல் வேண்டும்".

5. **ஓதுதல் :**

**அ) மகாமந்திரம்**

"அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி"

- இந்த மந்திரத்தை 32 முறை அனைவரும் சேர்ந்து கூற வேண்டும்.

**ஆ) திருவடிப் புகழ்ச்சி**

இதிலுள்ள வரிகளை இடைவெளிவிட்டு ஒருவர் கூற, மற்றவர்கள் திருப்பிக் கூறலாம். அல்லது ஒருவரியைப் படித்து முடித்ததும், மற்றவர்கள், அருட்பெருஞ்சோதி என்று கூறலாம்.

1. பரசிவம், சின்மயம், பூரணம், சிவபோக பாக்கியம், பரமநிதியம்
- அருட்பெருஞ்சோதி
பரசுகம், தன்மயம், சச்சிதானந்த மெய்ப்பரம ஏகாந்த நிலயம்
- அருட்பெருஞ்சோதி
பரமஞானம், பரம சத்துவ மகத்துவம், பரமகைவல்ய நிமலம்,
- அருட்பெருஞ்சோதி
பரமதத்துவ, நிரதிசய நிட்களம், பூதபௌதிகாதார நிபுணம்,
- அருட்பெருஞ்சோதி
பவபந்தநிக்ரக, வினோத சகளம், சிற்பரம், பரானந்த சொரூபம்
- அருட்பெருஞ்சோதி
பரிசயாதீதம், சுயஞ்சதோதயம், வரம், பரமார்த்த முக்த மௌனம்,
- அருட்பெருஞ்சோதி
படன வேதாந்தாந்தம், ஆகமாந்தாந்தம், நிருபாதிகம், பரமசாந்தம்
- அருட்பெருஞ்சோதி
பரநாத தத்துவாந்தம், சகச தரிசனம், பகிரங்கம், அந்தரங்கம்,
- அருட்பெருஞ்சோதி
பரவியோமம், பரமஜோதி மயம், பரம்பரம், அனந்தம், அசலம்,
- அருட்பெருஞ்சோதி
10 பரமலோக ஆதிக்க, நித்திய சாம்பிராச்சியம், பரபதம், பரமசூட்சுமம்
- அருட்பெருஞ்சோதி
பராபரம், அநாமய நிராதர மகோசரம், பரமதந்திரம், விசித்திரம்
- அருட்பெருஞ்சோதி
பராமுத நிராகரம், விகாசனம், விகோடணம், பரசுகோதயம், அட்சயம்
- அருட்பெருஞ்சோதி
பரிபவ விமோசனம், குணரகிதம், விசுவம், பதித்துவ பரோபரீணம்,
- அருட்பெருஞ்சோதி
பஞ்சகிர்த்திய சுத்தகர்த்தத்வம், தற்பரம், சிதம்பரவிலாசம்,
- அருட்பெருஞ்சோதி
பகர்சுபாவம் புனித மதுலமது லிதமம், பராம்பர நிராலம்பனம்,
- அருட்பெருஞ்சோதி
பரவு சாட்சாத்கார நிரவயவம், கற்பனாதீத நிருவிகாரம்,
- அருட்பெருஞ்சோதி
பரதுரிய அநுபவம், குருதுரிய, பதமம், பகம் பகாதீத விமலம்.
- அருட்பெருஞ்சோதி

பரம கருணாம்பரம், தற்பதம், கனசொற்பதாதீதம், இன்பவடிவம்,
- அருட்பெருஞ்சோதி

பரோட்ச ஞானாதீதம், அபரோட்ச ஞானானுபவ விலாசப் பிரகாசம்
- அருட்பெருஞ்சோதி

20 **பாவனாதீதம், குணாதீதம், உபசாந்தபதம், மகா மௌனரூபம்**
- அருட்பெருஞ்சோதி

பரமபோதம், போதரகித சகிதம், சம்பவாதீதம், அப்பிரமேயம்,
- அருட்பெருஞ்சோதி

பகரனந்தானந்தம், அமலம் உசிதம் சிற்பதம், சதானந்த சாரம்,
- அருட்பெருஞ்சோதி

பரையாதி கிரணாங்க சாங்க சௌபாங்க விம்பாகார நிருவிகற்பம்,
- அருட்பெருஞ்சோதி

பரசுகாரம்பம், பரம், பிரம்ம வித்தம், பரானந்த புரணபோகம்,
- அருட்பெருஞ்சோதி

பரிமிதாதீதம், பரோதயம், பரகிதம், பரபரீணம், பராந்தம்,
- அருட்பெருஞ்சோதி

பரம அற்புதம், பரமசேதனம், பசுபாச பாவனம், பரம மோட்சம்
- அருட்பெருஞ்சோதி

பரமானு குணநவாதீதம், சிதாகாச பாஸ்கரம் பரமபோகம்
- அருட்பெருஞ்சோதி

பரிபாக வேதன வரோதயானந்த பதபாலனம் பரமயோகம்
- அருட்பெருஞ்சோதி

பரம சாத்திய அதீதானந்த போக்கியம், பரிகதம், பரிவேத்தியம்,
- அருட்பெருஞ்சோதி

30 பரகேவல அத்விதானந்த அனுபவ சத்த பாதாக்ர சுத்த பலிதம்
- அருட்பெருஞ்சோதி

பரம சுத்தாத்வித ஆனந்த அனுபூதிகம் பரிபூத சிற்குணாந்தம்
- அருட்பெருஞ்சோதி

32 பரம சித்தாந்த நிகமாந்த சமரச சுத்த பரமானுபவ விலாசம்
- அருட்பெருஞ்சோதி

"அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி"

**இ.) அகவல் சுருக்கம்**

**அருட்பெருஞ்சோதி அகவலிலுள்ள கீழ்க்கண்ட 32 பாடல்களையும் அனைவரும் சேர்ந்து கூறலாம். அல்லது ஒருவர் ஒரு பாடலைப் படித்து முடித்ததும், மற்றவர்கள் அருட்பெருஞ்சோதி என்று கூறலாம்.**

1) எம்மையும், என்னைவிட்டு இறையும் பிரியாது
அம்மை அப்பனுமாம் அருட்பெருஞ்சோதி - அகவல் பாடல் - 56

2) சாதியும் மதமும் சமயமும் காணா
ஆதி அனாதியாம் அருட்பெருஞ்சோதி - 58

3) எப்பொருள் மெய்ப்பொருள் என்பர் மெய்கண்டோர்
அப்பொருள் ஆகிய அருட்பெருஞ்சோதி - 71

4) இறவா வரமளித்து என்னை மேலேற்றிய
அறவாழியாம் தனி அருட்பெருஞ்சோதி - 79

5) எங்கெங் கிருந்து உயிர் ஏதேது வேண்டினும்
அங்கங் கிருந்தருள் அருட்பெருஞ்சோதி - 85

6) சாவாநிலை இது தந்தனம் உனக்கே
ஆவாய் என அருள் அருட்பெருஞ்சோதி - 105

7) முத்தி என்பது நிலை முன்னுறு சாதனம்
அத்தக வென்ற என் அருட்பெருஞ்சோதி - 125

8) சித்தி என்பது நிலை சேர்ந்த அனுபவம்
அத்திறல் என்ற என் அருட்பெருஞ்சோதி - 126

9) ஜோதியுள் ஜோதியின் சொரூபமே அந்தம்
ஆதி என்றருளிய அருட்பெருஞ்சோதி - 132

10) எங்கே கருணை இயற்கையின் உள்ளன
அங்கே விளங்கிய அருட்பெருஞ்சோதி - 478

11) கொல்லா நெறியே குருவருள் நெறி எனப்
பல்கால் எனக்குப் பகர்ந்த மெய்ச்சிவமே - 481

12) உடற்பிணி அனைத்தையும் உயிர்ப்பிணி அனைத்தையும்
அடற்பறத் தவிர்த்த அருட்சிவ மருந்தே - 649

13) நினைத்தவை நினைத்தவை நினைத்தாங் கெய்துற
அனைத்தையும் தரும் ஓர் அரும்பெறல் மணியே - 636

14) மரணப் பெரும்பிணி வாரா வகைமிகு
கரணப் பெருந்திறல் காட்டிய மருந்தே - 652

15) உள்ஒளி ஓங்கிட உயிர்ஒளி விளங்கிட
வெள்ஒளி காட்டிய மெய்யருட் கனலே! - 741

16) அருளொளி விளங்கிட ஆணவம் எனுமோர்
இருளற என்உளத்து ஏற்றிய விளக்கே! - 719

17) துன்புறு தத்துவத் துரிசெலாம் நீக்கிநல்
இன்புற என்னுளத் தேற்றிய விளக்கே! - 720

18) மயலற அழியா வாழ்வு மேன்மேலும்
இயலுறு என்னுளத் தேற்றிய விளக்கே! - 721

19) இடுவெளி அனைத்தும் இயல் ஒளி விளங்கிட
நடுவெளி நடுவே நாட்டிய விளக்கே! - 722

20) கருவெளி அனைத்தும் கதிரொளி விளங்கிட
உருவெளி நடுவே ஒளிதரு விளக்கே! - 723

21) தேற்றிய வேதத் திருமுடி விளங்கிட
ஏற்றிய ஞான இயல்ஒளி விளக்கே! - 724

22) ஆகம முடிமேல் அருள் ஒளி விளங்கிட
வேகமது அறவே விளங்கொளி விளக்கே! - 725

23) வெம்மல இரவது விடிதரு ணந்தனில்
செம்மையில் உதித்துளம் திகழ்ந்த செஞ்சுடரே! - 736

24) திரைஎலாம் தவிர்த்து செவ்வி உற்றாங்கே
வரைஎலாம் விளங்க வயங்கு செஞ்சுடரே! - 737

25) அலகிலாத் தலைவர்கள் அரசுசெய் தத்துவ
உலகெலாம் விளங்க ஓங்கு செஞ்சுடரே! - 738

26) முன்உறு மலஇருள் முழுவதும் நீக்கியே
என்னுள வரைமேல் எழுந்த செஞ்சுடரே! - 739

27) ஆதியும் நடுவுடன் அந்தமும் கடந்த
சோதியாய் என்னுளம் சூழ்ந்த மெய்ச்சுடரே! - 740

28) இரவொடு பகலிலா இயல்பொது நடமிடு
பரம வேதாந்தப் பரம்பரஞ் சுடரே! - 746

29) சமரச சத்தியச் சபையில் நடம்புரி
சமரச சத்தியத் தற்சுயஞ் சுடரே! - 748

30) வாழி நின் பேரருள் வாழி நின் பெருஞ்சீர்
ஆழி ஒன்றளித்த அருட்பெருஞ்சோதி - 751

31) வெல்க நின் பேரருள் வெல்க நின் பெருஞ்சீர்
அல்கலின் றோங்கிய அருட்பெருஞ்சோதி - 753

32) போற்றி நின் பேரருள் போற்றிநின் பெருஞ்சீர்
ஆற்றலின் ஓங்கிய அருட்பெருஞ்சோதி - 755

**ஈ) போற்றிப் பாசுரங்கள்**

அகவல் வரிகளை ஓதி முடித்த பிறகு ஒரே சிந்தனையோடு அருட்பெருஞ்சோதி ஆண்டவரை நினைந்து நினைந்து, கீழ்க்கண்ட பாசுரங்களை ஓத வேண்டும் :-

1. **அருள்விளக்கே** அருட்சுடரே அருட்சோதிச்சிவமே
அருளமுதே அருள்நிறையே அருள்வடிவப் பொருளே
இருள்கடிந்தென் உளமுழுதும் இடங்கொண்ட பதியே
என் அறிவே என் உயிரே எனக்கினிய உறவே
மருள்கடிந்த மாமணியே மாற்றறியாப் பொன்னே
மன்றில் நடம் புரிகின்ற மணவாளா எனக்கே
தெருள் அளித்த திருவாளா ஞான உருவாளா
தெய்வச் நடத்தரசே நான் செய்மொழி ஏற்றருளே
- 6ஆ/36:1

2. கதிக்குவழி காட்டுகின்ற கண்ணே என் கண்ணில்
கலந்தமணியே மணியில் கலந்த கதிர் ஒளியே
விதிக்கும் உலகுயிர்க் குயிராய் விளங்குகின்ற சிவமே
மெய்யுணர்ந்தோர் கையகத்தே விளங்கிய தீங்கனியே
மதிக்குமதிக் கப்புறம்போய் வயங்கு தனிநிலையே
மறைமுடி ஆகமமுடிமேல் வயங்கும் இன்பநிறைவே
துதிக்கும் அன்பர் தொழப்பொதுவில் நடம்புரியும் அரசே
சொன்மாலை சூட்டுகின்றேன் தோளில் அணிந்தருளே
- 36:8

3. மலைவறியாப் பெருஞ்சோதி வச்சிரமா மலையே
மாணிக்க மணிப்பொருப்பே மரகதப்பேர் வரையே
விலைஅறியா உயர்ஆணிப் பெருமுத்துத்திரளே
விண்ணவரும் நண்ணரும்ஓர் மெய்ப்பொருளின் விளைவே
கொலை அறியாக் குணத்தோர்தம் கூட்டுறவு அருட்செங்
கோல் நடத்துகின்ற தனிக்கோவே மெய்அறிவால்
நிலைஅறிந்தோர் போற்றுமணி மன்றில் நடத்தரசே
நின்னடிப்பொன் மலர்களுக்கென் நெடுஞ்சொல் அணிந்தருளே
- 36:18

4. கண்களிக்கப் புகைசிறிதும் காட்டாதே புருவக்
கலைநடுவே விளங்குகின்ற கற்பூர விளக்கே
பண்களிக்கப் பாடுகின்ற பாட்டில் விளை சுகமே
பத்தருளே தித்திக்கப் பழுத்த தனிப்பழமே
மண்களிக்க வான்களிக்க மணந்தசிவ காம
வல்லிஎன மறைகளெலாம் வாழ்த்துகின்ற வாமப்
பெண்களிக்கப் பொதுநடஞ்செய் நடத்தரசே நினது
பெரும்புகழ்ச் சேவடிகளுக்கென் அரும்பும் அணிந்தருளே
- 36:19

5. உருவெளியே உருவெளிக்குள் உற்றவெளி உருவே
உருநடுவும் வெளிநடுவும் ஒன்றான ஒன்றே
பெருவெளியே பெருவெளியில் பெருஞ்சோதி மயமே
பெருஞ்சோதி மயநடுவே பிறங்கு தனிப்பொருளே
மருஒழியா மலர்அகத்தே வயங்கும் ஒளிமணியே
மந்திரமே தந்திரமே மதிப்பரிய மருந்தே
திருஒழியாது ஓங்குமணி மன்றில் நடத்தரசே
சிறுமொழி என்றிகழாதே சேர்த்து மகிழ்ந்தருளே
- 36 : 20

6. அறையாத மிகுபெருங் காற்றடித்தாலும் சிறிதும்
அசையாதே அவியாதே அண்ட பகிர்அண்டத்
துறையாவும் பிண்டவகைத் துறைமுழுதும் விளங்கத்
தூண்டாதே விளங்குகின்ற **ஜோதிமணி விளக்கே**
மறையாதே குறையாதே களங்கமும் இல்லாதே
மயக்காதே பனிக்காதே வயங்குகின்ற மதியே
இறையாய் எவ்வுயிரகத்தும் அகப்புறத்தும் புறத்தும்
இலங்கு நடத்தரசே என்இசையும் அணிந்தருளே
- 36 : 25

7. கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பருளும் களிப்பே
காணார்க்கும் கண்டவர்க்கும் கண்ணளிக்கும் கண்ணே
வல்லார்க்கும் மாட்டார்க்கும் வரமளிக்கும் வரமே
மதியார்க்கும் மதிப்பவர்க்கும் மதிகொடுக்கும் மதியே
நல்லார்க்கும் பொல்லார்க்கும் நடுநின்ற நடுவே
நரர்களுக்கும் சுரர்களுக்கும் நலம்கொடுக்கும் நலமே
எல்லார்க்கும் பொதுவில் நடம்இடுகின்ற சிவமே
என் அரசே யான் புகலும் இசையும் அணிந்தருளே

- 36 : 39

8. எண்ணாத மந்திரமே எழுதாத மறையே
ஏறாத மேனிலைநின்று இறங்காத நிறைவே
பண்ணாத பூசையிலே படியாத படிப்பே
பாராத பார்வையிலே பதியாத பதிப்பே
நண்ணாத மனத்தகத்தே அண்ணாத நலமே
நாடாத நாட்டகத்தே நடவாத நடப்பே
அண்ணா என்அப்பா என்ஐயா என் அரசே
அடிஇணைக்கு என்சொன்மாலை அணிந்து மகிழ்ந்தருளே

- 6ஆ/36:55

9. பரவெளியே நடவெளியே உபசாந்த வெளியே
பாழ்வெளியே முதலாக ஏழ்வெளிக்கு அப்பாலும்
விரவிய மாமறைகள் எலாம் தனித்தனி சென்றளந்தும்
மெய்யளவு காணாதே மெலிந்திளைத்துப் போற்ற
உரவில் அவை தேடிய அவ்வெளிக்குள் வெளியாய்
ஓங்கிய அவ்வெளிகளைத் தன் உள்அடக்கும் வெளியாய்
கரையற நின்றோங்குகின்ற சுத்தசிவ வெளியே
கனிந்த நடத்தரசே என் கருத்தும் அணிந்தருளே

- 6ஆ/36:68

10. கணக்குவழக்கது கடந்த பெருவெளிக்கு நடுவே
கதிர்பரப்பி விளங்குகின்ற கண்நிறைந்த சுடரே
இணக்கமுறும் அன்பர்கள்தம் இதயவெளி முழுதும்
இனிதுவிளங்குற நடுவே இலங்கும் ஒளிவிளக்கே
மணக்கும் நறுமணமே சின்மயமாய் என்உளத்தே
வயங்கு தனிப்பொருளே என்வாழ்வே என்மருந்தே
பிணக்கறியாப் பெருந்தலைவர்கள் சூழமணி மன்றில்
பெருநடஞ்செய் அரசேஎன் பிதற்றும் அணிந்தருளே

- 6ஆ/36:95

11. அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே
அன்பெனும் குடில்புகும் அரசே
அன்பெனும் வலைக்கு படுபரம் பொருளே
அன்பெனும் கரத்தமர் அமுதே
அன்பெனும் கடத்துள் அடங்கிடும் கடலே
அன்பெனும் உயிர் ஒளிர் அறிவே
அன்பெனும் அணுவுள் அமைந்தபேர் ஒளியே
அன்புருவாம் பரசிவமே

- 6ஆ/40:33

12. திருவிளங்கச் சிவயோக சித்திஎலாம் விளங்கச்
சிவஞான நிலைவிளங்கச் சிவாநுபவம் விளங்கத்
தெருவிளங்கு திருத்தில்லைத் திருச்சிற்றம் பலத்தே
திருக்கூத்து விளங்கஒளி சிறந்ததிரு விளக்கே
உருவிளங்க உயிர்விளங்க உணர்ச்சியது விளங்க
உலகமெலாம் விளங்க அருள் உதவுபெருந் தாயாம்
மருவிளங்கு குழல்வல்லி மகிழ்ந்தொருபால் விளங்க
வயங்குமணிப் பொதுவிளங்க வளர்ந்தசிவக் கொழுந்தே!

- 6அ/1:1

13. தனிப்பெருஞ் சோதித் தலைவனே எனது
தந்தையே திருச்சிற்றம் பலத்தே
கனிப்பெருங் கருணைக் கடவுளே அடியேன்
கருதிநின் றுரைக்கும் விண்ணப்பம்
இனிப்புறும் நினது திருவுளத் தடைந்தே
எனக்கருள் புரிகநீ விரைந்தே
இனிச்சிறு பொழுதும் தரித்திடேன் உன்றன்
இணைமலர்ப் பொன்னடி ஆணை

- 6அ/13:1

14. தடித்தஓர் மகனைத் தந்தைஈண் டடித்தால்
தாயுடன் அணைப்பள்தாய் அடித்தால்
பிடித்தொரு தந்தை அணைப்பன் இங் கெனக்குப்
பேசிய தந்தையும் தாயும்
பொடித்திரு மேனிஅம்பலத் தாடும்
புனிதநீ ஆதலால் என்னை
அடித்தது போதும் அணைத்திடல் வேண்டும்
அம்மை அப்பா இனி ஆற்றேன்

- 6அ/12:1

15. ஒளியாகி உள்ஒளியாய் உள்ஒளிக்குள் ஒளியாய்
ஒளிஒளியின் ஒளியாய்அவ் ஒளிக்குளும்ஓர் ஒளியாய்
வெளியாகி வெளிவெளியாய் வெளியிடைமேல் வெளியாய்
மேல்வெளிமேல் பெருவெளியாய்ப் பெருவெளிக்கோர் வெளியாய்
அளியாகி அதுஆகி அதுவும் அல்லா தாகி
அப்பாலாய் அப்பாலும் அல்லதுவாய் நிறைவாம்
தளியாகி எல்லாமாய் விளங்குகின்ற ஞான
சபைத்தலைவா நின்இயலைச் சாற்றுவதெவ் வணமே!

- 6இ/27:8

16. ஆதி அந்தமும் இல்லதோர் அம்பலத்தாடும்
சோதி தன்னையே நினைமின்கள் சுகம்பெற விழைவீர்
நீதி கொண்டுரைத்தேன்இது நீவிர்மேல் ஏறும்
வீதி மற்றைய வீதிகள் கீழ்ச்செலும் வீதி

- 6இ/31:3

17. துரிய மேல்பர வெளியிலே சுகநடம் புரியும்
பெரிய தோர்அருட் சோதியைப் பெறுதலே எவைக்கும்
அரிய பேறுமற் றவைஎலாம் எளியவே அறிமின்
உரிய இம்மொழி மறைமொழி சத்தியம் உலகீர்

- 6இ/31:5

18. அருட்சோதித் தெய்வம்எனை ஆண்டுகொண்ட தெய்வம்
அம்பலத்தே ஆடுகின்ற ஆநந்தத் தெய்வம்
பொருட்சாரும் மறைகள்எலாம் போற்றுகின்ற தெய்வம்
போதாந்தத் தெய்வம்உயர் நாதாந்தத் தெய்வம்
இருட்பாடு நீக்கிஒளி ஈந்தருளும் தெய்வம்
எண்ணியநான் எண்ணியவா றெனக்கருளும் தெய்வம்
தெருட்பாடல் உவந்தெனையும் சிவமாக்கும் தெய்வம்
சிற்சபையில் விளங்குகின்ற தெய்வமதே தெய்வம்

- 6ஆ/20:1

19. அப்பாநான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்
ஆருயிர்கட் கெல்லாம்நான் அன்புசெயல் வேண்டும்
எப்பாரும் எப்பதமும் எங்கணும்நான் சென்றே
எந்தைநின தருட்புகழை இயம்பிடல் வேண்டும்
செப்பாத மேனிலைமேல் சுத்தசிவ மார்க்கம்
திகழ்ந்தோங்க அருட்ஜோதி செலுத்தியிடல் வேண்டும்
தப்பேது நான்செயினும் நீபொறுத்தல் வேண்டும்
தலைவநினைப் பிரியாதநிலைமையும் வேண்டுவனே

- 6ஆ/35:1

20. பெற்ற தாய்தனை மகமறந் தாலும்
பிள்ளை யைப்பெறும் தாய்மறந் தாலும்
உற்ற தேகத்தை உயிர்மறந் தாலும்
உயிரை மேவிய உடல்மறந் தாலும்
கற்ற நெஞ்சகம் கலைமறந் தாலும்
கண்கள் நின்றிமைப் பதுமறந் தாலும்
நற்ற வத்தவர் உள்ளிருந் தோங்கும்
நமச்சிவாயத்தை நான்மற வேனே!

- 2/4:7

21. தாயும் தந்தையும் தெய்வமும் குருவும்
தாங்கு கின்றதோர் தலைவனும் பொருளும்
ஆயும் இன்பமும் அன்பும்மெய் அறிவும்
அனைத்தும் நீஎன ஆதரித் திருந்தேன்
ஏயும் என்னள விரக்கமும்ஒன் றிலையேல்
என்செய் வேன்இதை யார்க்கெடுத் துரைப்பேன்
சேயும் நின்னருள் நசையுறும் கண்டாய்
தில்லை மன்றிடைத் திகழ்ஒளி விளக்கே

- 2/93:2

22. அருள்பழுத் தோங்கும் கற்பகத் தருவே
அருண்மருந் தொளிர்குணக் குன்றே
அருள்எனும் அமுதந் தரும்ஒரு கடலே
அருட்கிர ணங்கொளும் சுடரே
அருள்ஒளி வீசும் அரும்பெறன் மணியே
அருட்சுவை கனிந்தசெம் பாகே
அருள்மணம் வீசும் ஒருதனி மலரே
அருண்மய மாம்பர சிவமே!

- 2/93:3

23. அருளரசே அருட்குன்றே மன்றாடும் அருள் இறையே
அருளமுதே அரும்பேறே நிறைந்த அருட்கடலே
அருளணியே அருட்கண்ணே விண்ணோங்கும் அருள்ஒளியே
அருளறமே அருட்பண்பே முக்கண்கொள் அருட்சிவமே

- 1/6:219

24. ஆதிஅப்பா நம்அநாதி அப்பா நங்கள்அம்மைஒரு
பாதிஅப்பா நிருபாதிஅப்பா சிவபத்தர்அனு
பூதிஅப்பா நல்விபூதிஅப்பா பொற்பொது நடஞ்செய்
ஜோதிஅப்பா சுயஞ்சோதிஅப்பா எனைச் சூழ்ந்தருளே

- 6ஆ/40(2:1)

25. சிற்றறி வுடையநான் செய்த தீமைகள்
முற்றவும் பொறுத்தருள் முனிந்திடேல் இன்றே
தெற்றென அருட்பெருஞ்சோதிச் செல்வமும்
மற்றவும் வழங்குக வரதனே என்றேன்

- 6அ/24(4:1)

26. ஆதியே திருஅம்பலத் தாடல்செய் அரசே
நீதியே எலாம்வல்லவா நல்லவா நினைந்தே
ஓதியே உணர்தற் கரிதாகிய ஒருவான்
சோதியே எனைச்சோதியேல் சோதியேல் இனியே

- 6அ/24(6:2)

27. எல்லாம் செய்வல்ல தெய்வம் எங்கும்நிறை தெய்வம்
என்னுயிரில் கலந்தெனக்கே இன்பநல்கும் தெய்வம்
நல்லார்க்கு நல்லதெய்வம் நடுவான தெய்வம்
நற்சபையில் ஆடுகின்ற நடராஜத் தெய்வம்
கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பருளும் தெய்வம்
காரணமாம் தெய்வம் அருட்பூரணமாம் தெய்வம்
சொல்லாத நிலைகளெலாஞ் சொல்லுகின்ற தெய்வம்
சிற்சபையில் விளங்குகின்ற தெய்வமதே தெய்வம்.

- 6இ/20:2

28. கருணா நிதியே அபயம் அபயம்
கனகாகரனே அபயம் அபயம்
அருணாடகனே அபயம் அபயம்
அழகா அமலா அபயம் அபயம்
தருணாதவனே அபயம் அபயம்
தனிநாயகனே அபயம் அபயம்
தெருணாடுறுவாய் அபயம் அபயம்
திருவம்பலவா அபயம் அபயம்

- 6அ/18:3

29. அடியார் இதயாம் புயனே அபயம்
அரசே அமுதே அபயம் அபயம்
முடியாதினிநான் தரியேன் அபயம்
முறையோமுறையோ முதல்வா அபயம்
கடியேன் அலன்நான் அபயம் அபயம்
கருணாகரனே அபயம் அபயம்
தடியேல் அருள்வாய் அபயம் அபயம்
தருணாதவனே அபயம் அபயம்

- 6அ/18:6

30. மறைமுடி விளக்கே போற்றி
மாணிக்க மலையே போற்றி
கறைமணி கண்ட போற்றி
கண்ணுதற் கரும்பே போற்றி
பிறைமுடிச் சடைகொண் டோங்கும்
பேரருட் குன்றே போற்றி
சிறைதவிர்த் தெனையாட் கொண்ட
சிவசிவ போற்றி போற்றி

- 2/94:6

31. போற்றிநின் அருள் போற்றி நின்பொது
போற்றி நின்புகழ் போற்றி நின்உரு
போற்றிநின் இயல் போற்றி நின்நிலை
போற்றி நின்நெறி போற்றி நின்சுகம்
போற்றி நின்உளம் போற்றி நின்மொழி
போற்றி நின்செயல் போற்றி நின்குணம்
போற்றி நின்முடி போற்றி நின்நடு
போற்றி நின்அடி போற்றி போற்றியே

32. போற்றி நின்இடம் போற்றி நின்வலம்
போற்றி நின்நடம் போற்றி நின்நலம்
போற்றி நின்திறம் போற்றி நின்தரம்
போற்றி நின்வரம் போற்றி நின்கதி
போற்றி நின்கலை போற்றி நின்பொருள்
போற்றி நின்ஒளி போற்றி நின்வெளி
போற்றி நின்தயை போற்றி நின்கொடை
போற்றி நின்பதம் போற்றி போற்றியே.

-6 ஆ / 40:5(i) 1,2

**எல்லோரும் எழுந்து நின்று ஒரே குரலில் பாட வேண்டிய பாடல்கள்:-**

உருவ ராகியும் அருவின ராகியும்
உருஅரு வினராயும்
ஒருவ ரேஉளார் கடவுள்கண் டறிமினோ
உலகுளீர் உணர்வின்றி
இருவ ராம் என்றும் மூவரே யாம்என்றும்
இயலும் ஐவர்கள் என்றும்
எருவ ராய்உரைத் துழல்வதென் உடற்குயிர்
இரண்டுமூன் றெனலாமே

- 6 (அ)24:45

இன்பவடி வம்தருதற்கு இறைவர் வருகின்றார்
எல்லாஞ்செய் வல்லசித்தர் இங்குவரு கின்றார்
அன்பர் உளத் தேஇனிக்கும் அமுதர்வரு கின்றார்
அம்பலத்தே நடம்புரியும் ஐயர்வரு கின்றார்
என்புருப்பொன் உருவாக்க எண்ணிவரு கின்றார்
என்றுதிரு நாதஒலி இசைக்கின்ற தம்மா
துன்பமறத் திருச்சின்ன ஒலிஅதனை நீயும்
சுகம்பெறவே கேளடிஎன் தோழிஎனைச் சூழ்ந்தே

- 6 (இ) 42:48

துரியபதம் கடந்தபெருஞ் சோதிவரு கின்றார்
　　சுகவடிவந் தரஉயிர்க்குத் துணைவர்வரு கின்றார்
பெரியபிர மாதியர்க்கும் அரியர் வருகின்றார்
　　பித்தர்என மறைபுகலும் சித்தர்வரு கின்றார்
இரிவகல்சிற் சபைநடஞ்செய் இறைவர்வரு கின்றார்
　　என்றுதிரு நாதஒலி இசைக்கின்ற தம்மா
உரிமைபெறும் என்தோழி நீயும்இங்கே சின்ன
　　ஒலிகேட்டுக் களித்திடுவாய் உளவாட்டம் அறவே

- 6 (இ) 42:49

குற்றம் புரிதல் எனக்கியல்பே
　　குணமாக் கொள்ளல் உனக்கியல்பே
சிற்றம் பலவா இனிச்சிறியேன்
　　செப்பும் முகமன் யாதுளது
தெற்றென் றடியேன் சிந்தைதனைத்
　　தெளிவித் தச்சந் துயர்தீர்த்தே
இற்றைப் பொழுதே அருட்சோதி
　　ஈக தருணம் இதுவாமே.

- 6 (இ) 24:46

ஜோதி ஜோதி ஜோதி சுயம்
　　ஜோதி ஜோதி ஜோதி பரம்
ஜோதி ஜோதி ஜோதி அருள்
　　ஜோதி ஜோதி ஜோதி சிவம்

- 6 (ஈ) I - 1:18

வாமஜோதி சோமஜோதி வானஜோதி ஞானஜோதி
மாகஜோதி யோகஜோதி வாதஜோதி நாதஜோதி
ஏமஜோதி வியோமஜோதி ஏறுஜோதி வீறுஜோதி
ஏகஜோதி ஏகஜோதி ஏகஜோதி ஏகஜோதி
ஆதி நீதி வேதனே! ஆடல் நீடு பாதனே
வாதி ஞான போதனே வாழ்க வாழ்க நாதனே.

- 6 (ஈ) I- 143:188

## 6. பிரார்த்தனை

எல்லோரும் சேர்ந்து கூற வேண்டிய பிரார்த்தனை :-

அருட்பெருஞ்சோதி ஆண்டவரே ! நாங்கள், பாவம் செய்யாதிருக்க வேண்டும்; **உயிர்க்கொலை புரியாதிருக்க வேண்டும். எல்லா உயிர்களிடத்தும் தயவு, கருணை, அன்பு செலுத்துதல் வேண்டும். சுத்த சன்மார்க்க சத்திய நெறியிலிருந்து வழுவாதிருக்க வேண்டும். மரணமிலாப் பெருவாழ்வை அடைந்திட வேண்டும்.**

## 7. வழிபாடு நிறைவு

மூன்றுமுறை **மகாமந்திரம்** கூற வேண்டும். இறுதியாக "**இராமலிங்கப் பெருமானார் திருவடிகள் வாழ்க வாழ்க**" என்று மூன்று முறை கூறி வழிபாட்டை நிறைவு செய்ய வேண்டும்.

குறிப்பு : **கலைந்து செல்வதற்கு முன்னால் அவரவர் விருப்பத்திற்கேற்ப சிற்றுண்டி வழங்கலாம்.**



ஜீவனின் சொரூபத்தை "சிவலிங்க வடிவ ஜோதி" என்றும் "ஆழியின் நடுவில் ஜோதி" என்றும் பல நூல்களில் எளியேன் குறிப்பிட்டுள்ளேன். இறைவன் திருவருளால் அகத்திய மாமுனிவரின் மேற்கண்ட படம் நமக்குக் கிடைத்துள்ளது. அவர் அணிந்திருப்பது "சிவமாலை" ; மார்பில் பதக்கம் போன்று காணப்பெறுவதே ஜீவனின் சொரூபம் என்று உலகுக்கு அறிவிக்கின்றேன்.



இராமலிங்கப் பெருமானாரின்

பாதசேவகன்

பா. கமலக்கண்ணன்

பாண்டிச்சேரி